**கவனிக்க.**- 2009.05.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1604 - 2009 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2009.05.29

*1604 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 627 |


**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் யூரிமார் பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வரராாந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மே மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(இலங்கை சமூகப்பணிக் கல்லூரி)

*சமூகப்பணி தொடர்பான ஈராண்டு டிப்ளோமாப் பாடநெறி*
*சிங்களம்/தமிழ் மொழி மூலம்- 2009/2011*

*சமூகப்பணி தொடர்பான டிப்ளோமா 2009/2011 பாடநெறிக்கு மாணவ – மாணவிகளைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த பாடநெறியின் நோக்கம் சமூக நலன்புரி மற்றும் சமூக அபவிருத்தி துறை தொடர்பான விஞ்ஞான பூர்வமான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு உள்ள சமூகப்பணியாளர்களை உருவாக்குவதாகும்.*

**1. அடிப்படைத் தகைமைகள்** .- (I) க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். (03 பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

அல்லது

(II) (அ) அரச அல்லது மாகாண சபை, அல்லது உள்ளூராட்சி சேவையில் கீழ்க்காணும் பதவி ஒன்றில் (அல்லது பல பதவிகளில்) 03 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்:-

(i) சமூக சேவை திணைக்களத்தினதும், வறுமை நிவாரண திணைக்களத்தினதும், மாகாண சபைகளினதும் சமூக சேவை உத்தியோகத்தர்.

(ii) நன்நடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைத் திணைக்கள நன்நடத்தை அதிகாரி, அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், விடுதியாளர்களும் உதவி விடுதியாளர்களும், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

(iii) சிறைச்சாலை திணைக்களத்தின் சிறைச்சாலைப் பாதுகாவலர் மற்றும் நலன்புரி அதிகாரி.

(iv) கூட்டுறவுத் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்திப் பரிசோதகர்கள்.

(v) பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கிராம உத்தியோகத்தர்.

(vi) கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கிராம அபிவிருத்தி அதிகாரி, உதவி கிராம அபிவிருத்தி அதிகாரி.

(vii) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உத்தியோகத்தர்கள், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள்.

(viii) கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள், கைதொழில் பயிற்செய்கைப் பகுதி, அரச சபைகளின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், நலன்புரி உத்தியோகத்தர்.

(ix) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.

(x) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

(xi) மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்

(xii) அபிவிருத்தி உதவியாளர் (சமூக சேவைகள் திணைக்களம்)

(xiii) நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு).

(xiv) உளவளத்துணை உதவியாளர் (சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு).

(xv) சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்.

(xvi) முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்.

(xvii) கல்வி உயர் கல்வி அமைச்சின் அல்லது மாகாண சபைகளின் ஆசிரியர்கள்.

(xviii) மீன் பிடி நீர்வள அமைச்சின் சமூக அபிவிருத்தி உதவியாளர்கள்.

(xix) காணி ஆணையாளர் திணைக்களத்தின் குடியேற்ற அதிகாரி.

(xx) சுகாதார சேவை திணைக்களத்தின் பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார தாதிகள், சுகாதார திணைக்களத்தின் உள மருத்துவ சமூகப்பணியாளர்கள்.

(xxi) உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூராட்சி ஆணைக்குழுவிலுள்ள சனசமூக அபிவிருத்தி அதிகாரி, உள்ளூராட்சி சபை அதிகாரி, நிவாரண அதிகாரி.

(xxii) அரச - அரச சார்பற்ற தனியார் துறைகளில் இதற்குச் சமனான பதவியிலுள்ள அதிகாரிகள்.

(xxiii) உள சுகாதார அபவிருத்தி உதவி உத்தியோகத்தர் (சுகாதார அமைச்சு)

(xxiv) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் சபையினால் அனுமதிக்குட்பட்ட மேற்கண்ட தகைமைகள் அல்லது அதற்குச் சமனான வேறு தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு**.- (i) மேற்குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுக்கு மேலான உயர் கல்வித் தகைமைகள் அல்லது சமூக நலநோம்பு அபிவிருத்தி களத்தில் விரிவான அனுபவம் இருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) க.பொ.த. (சா. தர) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கணிக்கப்படும்.

2. **வயதெல்லை** .-விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது 20 இற்குக் குறையாததாகவும், 46இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. **வேறு நிபந்தனைகள்**.- (i) இவ்விரு வருடங்களும் முழுநேரப் பாடநெறி என்பதால் தொழில்களில் இருப்பவர்கள், வேறு பாடநெறி செய்கின்றவர்கள் இப் பாடநெறிகளுக்கு இணைந்து கொள்வதாயின் ஈராண்டுக்கும் **விடுமுறை பெற்றுக் கொள்ளுதல் அவசியமாவதுடன் விடுமுறை பெறும் முழுப் பொறுப்பும் விண்ணப்பதாரிகளுக்குரியதாகும்**.

(ii) இப்பாடநெறி காலத்தில் வேறு முழுநேரப் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது. அத்தோடு இப் பாடநெறி பயிலும் காலத்தில் நீங்கள் வேறு ஒரு முழுநேரப் பாடநெறியினைப் பின்பற்றுவதாக அறியப்படின் நீங்கள் இப்பாடநெறியிலிருந்து நீக்கப்படுவீர்கள்.

4. பாடநெறியானது பின்வரும் நான்கு அரையாண்டுகளைக் கொண்டதாக அமையும் :-

(i) முதலாவது வருடம் - முதலாவது அரையாண்டு :

DSW 111 - சமூகப்பணிக்கான அறிமுகம்
DSW 112 - சமூக சூழல்
DSW 113 - மானிட விருத்தியும், அபிவிருத்தியும்
DSW 114 - தனிநபர் மற்றும் குடும்பங்களுடன் பணி செய்தல்
DSW 115 - இலங்கையில் சமூக நலன்புரி சேவைகள்
DSW 116 - களப் பயிற்சி I
DSW 117 - XYZ (மேலதிக பாடம்)

(ii) முதலாவது வருடம் - இரண்டாவது அரையாண்டு:

DSW 121 - சமூக குழுக்களுடன் பணி செய்தல்
DSW 122 - சமூகப் பணி முரண்பாட்டுத் தீர்வு மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல்.
DSW 123 - இலங்கையில் சமூக பிரச்சினைகள்
DSW 124 - பிரயோக ஆய்வு கூடம்
DSW 125 - மனித உரிமைகளும், சமூகப்பணியும்.
DSW 126 - களப் பயிற்சி II

(iii) இரண்டாம் வருடம் - முதலாவது அரையாண்டு:

DSW 211 - சமுதாயத்துடன் பணி செய்தல்
DSW 212 - சமூக நலன்புரி, நிர்வாகம் மற்றும் சமூகக் கொள்கைகள்
DSW 213 - சமூகப்பணி ஆய்வு
DSW 214 - மானிட வாழிடங்களில் சேவை வழங்குதல்
DSW 215 - மானிட வாழிடங்களில் சேவை வழங்குதல் (களப்பயிற்சி)
DSW 216 - உள நலமும், உளவளத்துணையும்
DSW 217 - குற்றம், வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம்
DSW 218 - இடர் முகாமைத்துவம்

(iv) இரண்டாம் வருடம் இரண்டாவது அரையாண்டு:
DSW 221 - களப் பயிற்சி III

* முதலாவது வருடம் - முதலாவது வருடத்தில் முதலாம் அரையாண்டில் 05 பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன் 288 மணித்தியால களப்பயிற்சி வழங்கப்படும்.

முதலாவது வருடத்தில் இரண்டாவது அரையாண்டில் 05 பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன் 300 மணித்தியால களப்பயிற்சி வழங்கப்படும்.

* இரண்டாவது வருடம் - இரண்டாவது வருடத்தில் முதலாவது அரையாண்டில் 08 பாடங்கள் கற்பிக்கப்படும்.

இரண்டாவது வருடத்தில் இரண்டாவது அரையாண்டில் முழுமையாக 960 மணித்தியால களப்பயிற்சி வழங்கப்படும்.

5. **டிப்ளோமா வழங்குதல்**.- கீழ்க் குறிப்பிடும் சகல விடயங்களையும் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும் :-

(அ) சமூக அபிவிருத்தி செயற்றிட்ட களப்பயிற்சி உட்பட மேற்கண்ட எல்லாப் பாடங்களிலும் சித்தியடைதல்.

(ஆ) பாடநெறி மற்றும் களப் பணிகளுக்கு முழுமையாக சமூகமளிக்க வேண்டும். சிறந்த நன்நடத்தையுடனிருத்தல் மற்றும் டிப்ளோமா பெறுவதற்கு தகைமையுடையவர் என தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பரீட்சை சபை தீர்மானித்தல்.

6. பாடநெறிக்கு சேர்த்துக் கொள்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை கொழும்பு, கண்டி, மாத்தறை, அம்பாறை, அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 06 நிலையங்களில் நடைபெறும். (குறிப்பிட்ட பரீட்சை நிலையத்தில் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத இடத்து அப் பரீட்சை நிலையத்துக்கான விண்ணப்பதாரிகள் அதற்கு அண்மையில் உள்ள நிலையத்துக்கு இணைக்கப்படுவர்.)

7. இந்த எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இறுதித் தீர்மானம் நிறுவனத்தின் அனுமதிச் சபையினால் எடுக்கப்படும்.

8. **பாடநெறி ஆரம்பிக்கப்படும் திகதி**.- 2009.10.20 (மாற்றமடைய இடமுண்டு).

9. **பாடநெறி நடக்கும் மொழி மூலம்**.- (தமிழ்/சிங்களம்)

10. **விண்ணப்பங்கள்**.- கீழ்காணப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க, 11½ "x 8½" அளவுள்ள தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை "பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்" என்ற பெயருக்கு வரையப்பட்ட ராஜகிரிய தபாலகத்தில் மாற்றக்கூடியவாறான 100 ரூபா பெறுமதியான காசுக்கட்டளையையும் இணைத்து, "பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இல. 488ஏ, நாவல வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு 2009.06.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நிறுவனத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்வதாயின் ரூபா 50 பணம் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். தொழில் புரிவோரின் விண்ணப்பங்கள் அவரவர் மேலதிகாரி மூலமாக உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத மற்றும் குறித்த திகதிக்குள் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள், எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

எம். ஏ. அல்லாம்,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
488ஏ, நாவல வீதி,
ராஜகிரிய.
2009, மே 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**
(இலங்கை சமூக சேவைக் கல்லூரி)

சமூகப்பணி தொடர்பான ஈராண்டு டிப்ளோமாப் பாடநெறி
(சிங்களம்/தமிழ் மொழி மூலம்) - 2009/2011

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-
   (i.) தமிழில் : ..........
   (ii.) (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) : ..........

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ..........
   ..........

3. பால் (ஆண்/பெண்) : ..........

4. திருமணமானவரா/திருமணமாகாதவரா? : ..........

5. பிறந்த திகதி : ..........

2009.06.25 ஆந் திகதியில் வயது:- வருடங்கள் ......................... மாதங்கள்............................ நாட்கள்.......................

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :...........................................................

7. விலாசம் (தனிப்பட்டது) :
(i) (தமிழில்) : ........................................................................................................................
........................................................................................................................
(ii) (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :-........................................................................................................................
........................................................................................................................
தொலைபேசி இல : ....................................................................
விலாசம் (அலுவலகம்) :
(i) (தமிழில்) :........................................................................................................................
..
(ii) (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) : ........................................................................................................................

தொலைபேசி இல : ........................................................................................

8. வசிக்கும் மாவட்டம் : ........................................................................................................................

9. வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு : :........................................................................................................................

10. எழுத்துப் பரீட்சைக்காக தாங்கள் தெரிவு செய்யும் பரீட்சை நிலையம் :- ............................................

........................................................................................................................
(பரீட்சை நடைபெறுவது மாத்தறை, கொழும்பு, கண்டி, அநுராதபுரம், அம்பாறை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே)

11. கற்க விரும்பும் மொழி மூலம் :-
(சிங்களம் /தமிழ்) : ........................................................................................................................

12. கல்வித் தகைமைகள் :

| சித்தியடைந்த பரீட்சை | பாடங்கள் | தரம் | பரீட்சை ஆண்டும் சுட்டிலக்கமும் | மொழி மூலம் | பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| க.பொ.த.(சா. த.) / சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் | (01)<br>(02)<br>(03)<br>(04)<br>(05)<br>(06)<br>(07)<br>(08) | | | | |
| 1 க.பொ.த.(உ. த.) | (01)<br>(02)<br>(03)<br>(04) | | | | |

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான குறைந்த பட்ச தகைமை பெற்றுள்ளீர்களா? (ஆம் / இல்லை) :-

3. பல்கலைக்கழகப் பட்டம் :

| பாடங்கள் | தரம் | பரீட்சை ஆண்டு மற்றும் மொழி மூலம் | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|
| 01.<br>02.<br>03<br>04. | | | |

13. வேறு கல்வி தகைமைகள் மற்றும் தொழில் தகைமைகள் :

(i) ……………………………………………………………………………….
(ii) ……………………………………………………………………………….
(iii) ……………………………………………………………………………….

14. தற்போதைய /முன்னைய தொழில் விபரங்கள் :

| திணைக்களம் / நிறுவனம் | பதவி | கால எல்லை | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| 01. | | | |
| 02. | | | |
| 03. | | | |
| 04 | | | |

15. வேறு மேலதிக தகைமைகள் (சமூக அபிவிருத்தி நலன்புரி சம்பந்தமான சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் போன்றவற்றில் விசேட திறமைகளும் /விருப்பங்களும்) தேவையாயின் மேலதிகத் தாள்களை விபரங்களுக்குப் பயன்படுத்தவும்.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

16. தற்போது வேறு பாடநெறிகளைத் தொடர்ந்து கொண்டிருப்பின் அவை பற்றிய விபரம் :

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

17. இந்தப் பாடநெறியைத் தெரிவு செய்வதற்கான காரணம் :……………………………………………………………

……………………………………………………………………………………………

எனக்குத் தெரிந்தவரையில் மேலுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானது என்றும், தெரிவின் பின்பு ஏதாவது பிழைகள் கண்டறியப்படின் எனது பாடநெறியிலிருந்து நான் நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

‘……………………………………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ……………………………………………………

**தொழில் வழங்குநரின் உறுதிப்படுத்துகை**

இந்த விண்ணப்பம் வண./திரு./திருமதி/செல்வி ……………………………………………………………… என்பவருடையது என நான் உறுதிப்படுத்துகின்றேன். இவரினால் வழங்கப்பட்டிருக்கும் விபரங்கள் சரியானது என்றும், அவர் இப்பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்டால் முழுச் சம்பளத்துடனான / முழுச் சம்பளமற்ற விடுமுறை வழங்க முடியுமென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………………………
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயரும்/பதவியும் : ……………………………………………………
திணைக்களம்/நிறுவனம் : ……………………………………………………………………
பதவி முத்திரை :
திகதி : ……………………………………………………

5-553

## தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் - 2009/2010

இவ் வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகள் தொடர்பாக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகளுள் அவர்கள் தகைமைகளுக்கும் திறமைகளுக்கும் அமைய கற்கை நெறிகளுக்கு தேவையான எண்ணிக்கைகளுக்கு ஏற்ப மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2. விண்ணபதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 13"x8" அளவிலான தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பகுதி 12 இல் கூறப்பட்டதற்கு இணங்க, ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு அதன் மேல் விண்ணப்பதாரர் தனது கையொப்பம் இடுவதன் மூலம் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 22.06.2009 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் உரிய தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். இவ்விண்ணப்பங்களை இத் திணைக்களத்திற்கோ அல்லது ஏதாவதொரு அதிகாரியின் அலுவலக அல்லது சொந்த முகவரிக்கோ அனுப்ப வேண்டாம் என விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

3. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியின் பெயர் அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

உதாரணம்.- எந்திரவியல் சார் பட வரைவியலுக்கான தேசிய சான்றிதழ் (ETC - 05) )

4. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணபதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் கவனமாக கற்கை நெறியின் பெயர், கற்கை நெறியின் குறியீட்டு எண், பயிற்சி நெறியைத் தொடரவிருக்கும் தொழில் நுட்பக் கல்லூரி, போதனாமொழி என்பவற்றை சரிவரக் குறிப்பிடல் வேண்டும். கல்லூரி, கற்கைநெறி, போதனாமொழி என்பவற்றை மாற்றுவதற்கான வேண்டுகோள் பின்னர் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

6. கீழ்க்குறிக்கப்படும் வகையில் பகுதி நேர மற்றும் மாலை நேர பயிற்சி நெறியை தொடரும் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சிக் கட்டணங்கள் அறவிடப்படும் :-

(1) பகுதி நேரம்/மாலை நேர - சான்றிதழ் பயிற்சி நெறிகள் (ஒரு வருடத்திற்கு மேற்பட்டவை) வருடமொன்றிற்கு ரூபா 2,000.

(2) பகுதி நேரம்/மாலைநேர - சான்றிதழ் பயிற்சி நெறிகள் (ஒரு வருடமும், குறுங்கால பயிற்சி நெறிகள் ஒரு வருடத்திற்கு உட்பட்டவையும்) ஒவ்வொரு பாடநெறிக்கும் ரூபா 1,500

7. ஒவ்வொரு விண்ணப்பதாரிகளின் கவனத்திற்காக இவ்வறிவித்தலின் இறுதியில் பயிற்சி அட்டவணை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அவ் அட்டவணையானது பயிற்சி நெறியின் தன்மை, ஒவ்வொரு பயிற்சிநெறிக்கும் தேவைப்படும் தகைமைகள், பயிற்சிநெறிகள் நடாத்தப்படும் கல்லூரிகள், கற்கைநெறிக்கான மொழிமூலம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. பயிற்சி நெறிகள் நடாத்தப்படவிருக்கும் தொழில் நுட்பக்கல்லூரிகளின் முகவரிகள் தொழில் நுட்பக்கல்லூரிகளின் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளது.

8. தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரிகள்-

(1) நற்பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும் ;
(2) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(3) விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போதே அனுமதி பெறுவதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

9. தகுதியான பரீட்சார்த்திகள் ஒரு பொது உளச்சார்புப் பரீட்சை மூலம் அத்துடன்/அல்லது ஓர் நேர்முகப்பரீட்சை பெறுபேறுகள் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

10. ஏதாவது ஆவணங்களையோ அல்லது அவற்றினது பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கக்கூடாது. தமது தகைமையை நிரூபிப்பதற்கு தேவையானதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது வழங்கத் தவறும் மாணவர்களது அனுமதி இரத்துச் செய்யப்படும்.

11. முழு நேரக் கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்பப் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப கல்லூரி வகுப்புக்களுக்குச் சமுகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 20 வீதம் மாணவர் உதவிக் கொடுப்பனவானது மாதம் ஒன்றிற்கு ரூபா 450 இற்கு மேற்படாது வழங்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த, முழுநேரக் கற்கை நெறி மாணவர்களுள் ஏறத்தாழ 840 பேர் வருடமொன்றிற்கு ரூபா 2,500 வீதம் மாணவர் உதவுத்தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

12. சகல ஆவணங்களின் நம்பகத்தன்மைக்கும் விண்ணப்பதாரியே முழுப்பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மை உறுதி செய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்களை பயன்படுத்தி விண்ணப்பதாரிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

(கலாநிதி) எச். எல். ஒபேசேகர,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்.

த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

**தொழில் நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியல்**

| தொடர் இல. | தொழில்நுட்பக் கல்லூரி | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி | ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10. | கொழும்பு |
| 2. | காலி தொழில் நுட்பக் கல்லூரி | களுவெல்ல, காலி | காலி |
| 3. | கண்டி தொழில் நுட்பக் கல்லூரி | அறுப்பொல, கண்டி | கண்டி |
| 4. | யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி | பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், | யாழ்ப்பாணம் |
| 5. | பதுளை தொழில் நுட்பக் கல்லூரி | கிறீன்லண்ட்டிரைவ், பதுளை, | பதுளை |
| 6. | கேகாலை தொழில் நுட்பக் கல்லூரி | கச்சேரி வீதி, கேகாலை, | கேகாலை |
| 7. | அநுராதபுரம் தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், அநுராதபுரம், | அநுராதபுரம் |
| 8. | குருநாகல் தொழில் நுட்பக் கல்லூரி | புத்தளம் வீதி, குருநாகல், | குருநாகல் |
| 9. | இரத்மலானை தொழில் நுட்பக் கல்லூரி | காலி வீதி, இரத்மலானை, | கொழும்பு |
| 10. | அம்பாறை ஹாடி தொழில் நுட்பக் கல்லூரி | இங்கினியாகல வீதி, அம்பாறை, | அம்பாறை |
| 11. | மாத்தறை தொழில் நுட்பக் கல்லூரி | மெத்தவத்தை, மாத்தறை, | மாத்தறை |
| 12. | சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி | அம்பாறை வீதி, சம்மாந்துறை, | அம்பாறை |
| 13. | களுத்துறை தொழில் நுட்பக் கல்லூரி | களமுல்ல, களுத்துறை, | களுத்துறை |
| 14. | இரத்தினபுரி தொழில் நுட்பக் கல்லூரி | பார்ம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 15. | வறக்காப்பொல தொழில் நுட்பக் கல்லூரி | அம்பகல வீதி, வறக்காப்பொல, | கேகாலை |
| 16. | குளியாப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி | பன்னலவீதி, குளியாப்பிட்டிய, | குருநாகல் |
| 17. | பாத்ததும்பறை தொழில் நுட்பக் கல்லூரி | நவயாலதென்ன, கடுகஸ்தொட்ட, | கண்டி |
| 18. | நுவரெலியா தொழில் நுட்பக் கல்லூரி | ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா, | நுவரெலியா |
| 19. | ஹோமாகம தொழில் நுட்பக் கல்லூரி | கொடகம, ஹோமாகம, | கொழும்பு |
| 20. | பெலியத்த தொழில் நுட்பக் கல்லூரி | புவக்தண்டாவ, பெலியத்த, | ஹம்பாந்தோட்டை |
| 21. | ஹசலக தொழில் நுட்பக் கல்லூரி | யோத எல வீதி, ஹசலக | கண்டி |
| 22. | தம்புள்ள தொழில் நுட்பக் கல்லூரி | மாத்தளை வீதி, தம்புள்ள | மாத்தளை |
| 23. | பலப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி | வந்ததுவ புகையிரத நிலைய வீதி, பலப்பிட்டிய, | காலி |
| 24. | வாரியப்பொல தொழில் நுட்பக் கல்லூரி | சிலாபம் வீதி, வாரியப்பொல, | குருநாகல் |
| 25. | மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி | மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு, | மட்டக்களப்பு |
| 26. | பண்டாரவளை தொழில் நுட்பக் கல்லூரி | வேவதென்ன, பண்டாரவளை, | பதுளை |
| 27. | மொனராகலை தொழில் நுட்பக் கல்லூரி | சிறிகல, மொனராகலை | மொனராகலை |
| 28. | கம்பஹா தொழில் நுட்பக் கல்லூரி | வெரலவத்தை, யக்கல | கம்பஹா |
| 29. | திருகோணமலை தொழில் நுட்பக் கல்லூரி | மிஹிந்தபுரம், திருகோணமலை, | திருகோணமலை |
| 30. | தெஹியத்தகண்டிய தொழில் நுட்பக் கல்லூரி | மஹாவானவெல, தெஹியத்தகண்டிய, | அம்பாறை |
| 31. | மாத்தளை தொழில் நுட்பக் கல்லூரி | எம். சீ. வீதி, மாத்தளை, | மாத்தளை |
| 32. | வீரவில தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், வீரவில, | ஹம்பாந்தோட்டை |
| 33. | மெதகம தொழில் நுட்பக் கல்லூரி | மெதகம, | மொனராகலை |
| 34. | பொலன்னறுவை தொழில் நுட்பக் கல்லூரி | வித்தியாபுர, பொலன்னறுவை, | பொலன்னறுவை |
| 35. | எம்பிலிப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், எம்பிலிப்பிட்டிய, | இரத்தினபுரி |
| 36. | வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி | மன்னார் வீதி, வவுனியா, | வவுனியா |
| 37. | அக்கறைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரி | அக்கறைப்பற்று, | அம்பாறை |
| 38. | ஆணமடுவ தொழில் நுட்பக் கல்லூரி | கம்முதாபூமி, தம்மண்ணகம, ஆணமடுவ | புத்தளம் |

## மாதிரி விண்ணப்பப்படிவம்

## தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் - கல்வி ஆண்டு 2009/2010

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும். தொழில் நுட்பக் கல்லூரிகளின் முகவரிகள் தொழில் நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியலில் உள்ளன.

(ஒவ்வொரு கற்கை நெறிக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.)

1. தொழில்நுட்பக் கல்லூரியின் பெயர்/பயிற்சி நிலையம் :----.

2. கற்கைநெறியின் பெயர் :----. (முழு நேரம் பகல்/மாலை/பகுதி நேரம்)
போதனா மொழி :----. குறியீட்டு இல. :---.

3. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.

4. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. மாவட்டம் :----. தேர்தல் தொகுதி :----.
கிராம அலுவலர் பிரிவு :----.

8. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

2009.07.01 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

9. ஆண்/பெண் :----.

10. கல்வித் தகைமைகள் :-
(அ) க.பொ. த. (சா/த) பெறுபேறுகள் (இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல்):-

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

(ஆ) க. பொ. த. (உ/த) பெறுபேறுகள் (ஒரு தடவையில்):-

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் :----.

(ஈ) விண்ணப்பதாரர் மேலே (அ) வில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிராவிடின் சித்தியடைந்த உயர் தரம் :----.
தரம் :----. ஆண்டு :----.

11. **மாலை நேரம் மற்றும் பகுதி நேர கற்கை நெறிகளுக்கு மட்டும்.**
*தொழில் ஒரு தகைமையாகவுள்ள பயிற்சிநெறிகளுக்கு மட்டும் இப்பகுதி பூர்த்தி செய்யப்பட வேண்டும்.*

11.1 விண்ணப்பதாரரின் பெயர் :----.

11.2 தற்போது வகிக்கும் பதவி மற்றும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
சுயதொழில் புரிபவராயின் வேலையின் தன்மை :-----.

11.3 வேலை செய்யும் இடமும் அதன் முகவரியும் :-----.

11.4 ஊழியர் சேமலாப நிதிய இலக்கம் :----.
ஊழியர் நம்பிக்கை நிதிய இலக்கம் :----.

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர் எனது நிறுவனத்தில்/அலுவலகத்தில் தொழில் புரிபவர் என நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

11.5 தொழில் தருநரின் பெயர் :----.

11.6 பதவி :----.

11.7 கையொப்பம் :----. அலுவலக முத்திரை :----.

11.8 திகதி :

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு உட்பட்ட வரையில் உண்மையானவை என்றும் விண்ணப்பித்துள்ள பயிற்சிநெறிக்கு வேண்டிய தகைமைகள் எனக்கு உண்டு என்றும் இத்தால் உறுதிமொழிகின்றேன். மேலும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் திட்டத்திற்கு இணங்குவேன் என்றும் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது முடிவே இறுதியானது எனவும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10 ரூபா பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன்மேல் கையொப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும்.

**தொழில் நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளின் அட்டவணை - 2009/2010**

***எந்திரவியல் தொழில் நுட்பவியலாளர் கற்பதற்கான கற்கை நெறிகள் :***
***முழு நேர கற்கை நெறிகள்***

| தொடர் இல. | குறியீட்டு எண் | கற்கைநெறியின் பெயர் | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | கற்கை நெறி நடைபெறும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் ஊடக மொழியும் |
|---|---|---|---|---|
| 1. | ETB - 03 | விவசாயத்தில் தேசிய டிப்ளோமா முழு நேரம் - பகல் இரு வருடங்கள் | (1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே தடவையில் விவசாயம் உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்று, அவற்றில் நான்கு திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும். நான்குதிறமைச் சித்திகளுக்கும் உரிய பாடங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும். | ஊடக மொழி : சிங்களம் தம்புள்ள, குளியாப்பிட்டி |

| தொடர் இல. | குறியீட்டு எண் | கற்கைநெறியின் பெயர் | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | கற்கை நெறி நடைபெறும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் ஊடக மொழியும் |
|---|---|---|---|---|
